# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 தி.பி. 2016 மேழம் 2 (14-4-85) 65 காசுகள் இதழ் எண்: 55 பகுதி 10-11


## இந்தத் தலைமுறையில் நடுவணரசிடமிருந்து விடுவித்துக் கொள்ள வில்லையானால், எப்பொழுதும் நாம் அடிமைதாம்!

## நம் மொழி, பண்பாடு, கலைகள், எல்லாமே ஆரியப்படுத்தப் படுகின்றன!

### நம் இலக்கியம், வரலாறு அனைத்தும் மூடி மறைக்கப்படுகின்றன! பிற முன்னேறாத இனங்களுடன், நாமும் முன்னேறாமலே கிடக்க வேண்டும்!

## தமிழினத்தை மறைமுகமாக அழிக்கின்ற சூழ்ச்சியையே, தமிழீழச் சிக்கலில் தில்லி அரசு கையாள்கிறது.

### தமிழினப் பேராயக் கட்சியினர் உண்மையறிந்து, இனஉணர்வுபெறவேண்டும் தமிழினத் தலைவர்கள், பிறரை முன்வைக்கக் கூடாதென்னும் சூழ்ச்சி தவிர்த்து, பல முயற்சிகளையும் ஒன்றுபடுத்த வேண்டும்! காலம் கருதாத நிலையில், வேறு எம் முயற்சியும் இப்பொழுது தேவையில்லை!

## தமிழினமே ஒன்றுபட்டு இயங்குக!

தமிழின விடிவிப்புக்கான காலம் கனிந்துள்ளது. ஆனால் வீணே கழிந்துகொண்டுள்ளது. நம் தேசிய இன விடுதலைக்குரல் வலிவாக இன்னும் தில்லிக்கு எட்டவில்லை. தமிழீழ விடுதலைக்கே தில்லி செவி சாய்க்கவில்லை. செவிசாய்க்கும் என்னும் நம்பிக்கையும் இல்லை. இந்த நிலையில் தமிழக விடுதலைக் குரலை அவர்கள் மதிக்கப்போவதே இல்லை இந்தியாவில், இன்றைய நிலையில் அசாம், பஞ்சாப், மிசோரம், நாகாலாந்து, ஒரிசா முதலிய பல மாநிலங்களில் தேசிய இன விடுதலைக்கான முயற்சிகளும் முத்தாய்ப்புகளும் தொடங்கிவிட்டன. இந்தியாவிலிருந்து தேசிய இன விடுதலை பெறுவதற்குரிய தகுதியும் தேவையும் பெற்ற முதல் மாநிலம் தமிழகமே!

ஆனால் இது கண்மூடி அடிமைப்பட்டுக் கிடப்பது பெரிதும் வருந்தத்தக்கது. அனைத்துலகும் ஒன்று என்னும் எண்ணம் வேறு; அனைத்துரிமைகளும் பெறவேண்டும் என்னும் கோரிக்கை வேறு. முன்னது பொதுவானது; பின்னது சிறப்பானது! மேலும் தில்லியரசு நமக்குள்ள உரிமைகளை என்றுமே முழுமையாக வழங்கப் போவதில்லை. மாறாக, நம் இனத்தின் தனிச்சிறப்புக் கூறுகளையும் நலன்களையும் ஒன்றுமற்ற பிற காட்டு விலங்காண்டி இனங்களுடன் பங்கு போட்டுக் கொள்ளவே திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நூறை இழந்து ஒன்றைப் பெறுவதே நமக்குப் போதும் என்று கருதிவிடக் கூடாது. இந்திக்கு நூறு கோடி! தமிழுக்கு ஒரு கோடி! இந்தியை விட தமிழ் நூறு மடங்கு தாழ்ந்ததா? மூடர்களையும் அடிமைகளையும் தவிர, அறிவுள்ளவர்களும், உணர்வுள்ளவர்களும் இதை எப்படி ஏற்க முடியும்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழர் அனைவரும் ஒன்றிணைந்து ஓங்கிக் குரல் கொடுத்தால் தவிர, நமக்குள்ள எல்லாமே இன்னும் சில ஆண்டுகளில் பறிபோய்விடும். இந்தத் தலைமுறையில் நாம் நடுவணரசிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வில்லையானால், வேறு எப்பொழுதுமே எந்தச் சூழ்நிலையிலுமே நம்மை விடுவித்துக் கொள்ளமுடியாமற் போய்விடும். பின்னர் என்றென்றுமே நாம் அடிமைகளாகத்தான் கிடக்க வேண்டும்!

இன்றைய நிலையில் இந்தியத் தேசியம் என்னும் பெயராலும், ஒருமைப்பாடு என்னும் பெயராலும் நம் மொழி, பண்பாடு, கலைகள் ஆகிய அனைத்துக் கூறுகளுமே ஆரியப் படுத்தப்படுகின்றன. நம் இலக்கியங்கள், வரலாறுகள் அனைத்தும் மூடி மறைக்கப் படுகின்றன. மற்ற இனங்களுக்கு அஃது ஊதியம்; நமக்கு இழப்பு! இந்த நிலைகள் தொடருமானால், பிற முன்னேறாத இனங்களுடன் நாமும் முன்னேறாத இனமாகவே கிடக்கவேண்டும்; இது கொடுமை; மிக மிகக் கொடுமை! இஃது ஓர் இன அழிப்பு முயற்சியே!

இந்தியாவிலேயே மிகவும் பண்பட்ட, அறிவு வளர்ச்சியுற்ற, மிகச்சிறந்த முதிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழினம், வேறு காட்டு விலங்காண்டி இனங்களுடன் ஒன்றிணைந்து தன் தனிச்சிறப்பியல் கூறுகளை இழந்து கொண்டு, பின் தங்கிக் கிடக்க வேண்டும் என்னும் அறியாமைக்கும் அடிமைப்படுத்தத்திற்கும் நாம் இசைந்து விடக் கூடாது. நமக்கென்று நம் நாட்டை நாம் பெற்றுத் தீர வேண்டும் என்பதைக் கட்டாயக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

தில்லிக்கு நேர் எதிர் முயற்சிகளைத் தமிழகமும் தமிழர்களுந்தாம் செய்ய முடியும். ஏனெனில் ஆரியத்துக்கு நேர் எதிரான கூறுகளைக் கொண்டது தமிழினமே! எனவேதான் தமிழினத்தை ஒருமைப்பாடு என்னும் பெயரால் தில்லி, ஒடுக்கப் பார்க்கிறது; ஒழிக்கப் பார்க்கிறது. இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு தமிழீழச் சிக்கலில் அது கையாளுகின்ற முறையே. தமிழினத்தை மறைமுகமாக அழிக்கின்ற சூழ்ச்சியையே, தமிழீழச் சிக்கலில் தில்லி அரசு இங்குத் தில்லிக்கு அடிமையாகிக் கையாள்கிறது.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம் பார்க்க

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

தொடர்—9. —இதழ் எண்: 37-இன் தொடர்ச்சி



# ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

## என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

(**வாசகர்களின் கவனத்திற்கு:** இக் கட்டுரைத் தொடரை இடைவிடாமல் ஒவ்வோர் இதழிலும் எழுதவேண்டும் என்று எண்ணியே தொடங்கினேன். இதில் கூறப்பெறவேண்டிய கருத்துகளுக்காகவே இதனை எழுத விரும்பினேன். மற்றபடி நான் இங்கெல்லாம் போனேன்; இதையிதை யெல்லாம் கண்டேன்; சுவைத்தேன் என்னும் பெருமைக்காகவன்று. அனைவருக்குமே கிடைக்காத இவ்வாய்ப்பை; யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நோக்கே இதனை எழுதத் தூண்டியது.

ஆனால், ஓய்வில்லாத - இடைவிடாத பணிகளாலும், வெளியூர்ச் செலவுகளாலும், புதிதாக அமைக்கப்பெற்ற விடுதலைக் கூட்டணியை விரிவுபடுத்தி, முன்னெடுத்துச் சென்று, செயலுக்குடக்களை அணியப்படுத்தும் நோக்கில் பல்வேறு வகையாகச் சிந்தித்தும், எழுதியும் செயல்பட்டுக் கொண்டும் இருப்பதாலும், இத் தொடரையும், வேறு சில **தென்மொழி, தமிழ்ச்சிட்டில்** வரும் தொடர்களையும் முறையாக எழுத நேரமில்லாமல் இடர்ப்படுகிறேன். இருப்பினும், அவ்வப்பொழுது இடையீடுபடும் பொழுதில் எல்லாம் அனைத்தையும் சிறிது சிறிதாகவேனும் எழுதி முடித்து விடுவேன்.

மேலும் எல்லாத் தொடரினும் இத்தொடரை மட்டும் விடாமல் எழுதி வரவேண்டும் என்று விரும்புகிறேன். எனவே, இத்தொடரின் முன் கட்டுரைகளைப் படிக்காத அல்லது கிடைக்கப் பெறாத அன்பர்கள், அவற்றை யாரிடமேனும் பெற்றாகிலும், கிடைக்காத விடத்து அலுவலகத்திற்கு எழுதிப்பெற்றாகிலும் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். கடந்த எட்டுத் தொடர்களும் வெளிவந்த இதழ் எண்கள்: 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 35, 37.)

**4. பாரிசு நிகழ்ச்சிகள்** (தொடர்ச்சி)

(சென்ற 8-ஆம் தொடர்க் கட்டுரையின் இறுதிப் பத்தியில், இரண்டாவது வரியில், **''பிரான்சைச் சிலைகள் நகரம்** என்று சொன்னாலும் மிகையாகாது'' என்ற தொடரில் 'சிலைகள்' என்னும் சொல் 'சிறப்பு' என்று எப்படியோ அச்சாகியுள்ளது. அதைத் திருத்திப் படித்துக் கொள்ளவும்,)

முதன் முதலாகப் பாரீசைச் சுற்றிப் பார்த்த எனக்கு அந்நகரின் அமைப்பும் அழகும் தூய்மையும் வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தன. நம் இந்திய நாட்டிலுள்ள நகரங்களுக்கும், இதற்கும் எத்துணை வேறுபாடுகள்! அந் நகரத்தின் இயற்கையழகு போன்றதே, அதன் செயற்கை அழகும்! சிலைகள் மிகுந்து தோன்றும் அந்நகரமே செதுக்கி வைக்கப்பெற்ற ஒரு சிலை போன்றது!

அங்குள்ள தெருவோரக் கடைகளின் அமைப்பு மிக ஒழுங்கு சான்றது நம் ஊர்க் கடைகள், சில வெளியே வந்தும் சில உள்ளடங்கியும் இருக்கும். ஆனால், அங்குள்ள கடைகள் ஒரே நேர்க் கோட்டில் அமைந்திருப்பன போல், அத்துணை ஒழுங்குற அமைக்கப்பெற்றிருக்கின்றன! இங்கு ஒரு சில கடைகளே நன்கு புனையப் பெற்றிருக்கும். ஆனால், அங்கு அனைத்துக் கடைகளுமே நன்கு சுவடிக்கப் பெற்ற அழகுடன் மிளிர்வதைக் கண்டேன். இரவு நேரங்களில் கடைகளின் முன்புறம் பற்பல ஒளி நிற விளக்குகள், அவற்றை மேலும் அழகு படுத்துகின்றன. தெருக்களின் இடையில் ஒரு மரத்தையோ, வேறு தடைகளையோ பார்க்க இயலாது. தெருக்களும் அவ்வளவு தூய்மையாக உள்ளன. நம் நாட்டிலுள்ள பெரு நகரங்களில் உள்ள சில தெருக்களில் கால் வைத்து நடந்து போகக் கூசும். சத சதவென்று சாய்க்கடை நீர் தெரு ஓரங்களில் தேங்கியிருக்கும். அவற்றில் காய்ந்த இலைகளும், தாள்களும் விழுந்து, நொத நொதவென்று ஊறிக் கிடக்கும். அவற்றுடன் குப்பைகூளங்களும், மண்ணும் கலந்து சேறாகி, நாற்றமெடுத்து இருக்கும்! சில விடங்களில் தெருவில் திரியும் மாடுகளும் எருமைகளும், அச் சேற்றுக் குட்டைகளில் படுத்துத் தாம் கிழித்துத் தின்ற சுவரொட்டித் தாள்களை அசைபோட்டுக்கொண்டிருப்பதை நீங்கள் கட்டாயம் பார்த்திருக்கலாம் இக்காட்சி போல் ஒன்றையேனும், அங்குள்ள எந்த நகர்ப் பகுதியிலும் பார்க்க வியலாது. இந்த நிலையை அடையவே நாம் இன்னும் நெடுங்காலம் முன்னேறியாக வேண்டும்.

நாங்கள் போய்க் கொண்டிருந்த பகுதியில் உள்ள கடைகளில் சில பாலியல் காட்சிக் (Sex Shops) கடைகள் அவற்றில் நம் ஊரில் உள்ள படப்பிடிப்புக் கடைகளில் பல திரைப்பட நடிக நடிகையர் படங்களைப் பெரிய அளவில், முன் பகுதியில் மாட்டியிருப்பார்களே, அவற்றைப்போல் அங்கு ஆளுயர அளவில், ஆண்களையும், பெண்களையும் அம்மணமாகப் படம் பிடித்து பெரிது பிண்ணி மாட்டியிருக்கிறார்கள். சில படங்கள் ஆண் பெண் இணைந்து உடலுறவுகொள்ளும் காட்சிகளாகவும் உள்ளன, அவற்றை நான் மட்டுந்தான் நின்று நின்று பார்த்து வியந்து கொண்டு நடந்தேன். அங்கு நடந்து சென்ற கூட்டத்துள் ஒரு சிலராகிலும், அப் படங்களைக் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை ஒரு வேளை அவர்களுக்கு அக் காட்சிகள் பழகிப்போய் இருக்கிலாம். எனக்கோ, அவை முற்றிலும் புதியவை அல்ல என்றாலும், சிங்கப்பூரில் அதுபோலும் காட்சிகள் சிலவற்றைப் பார்த்திருக்கின்றேன் ஆனாலும், இவை அவற்றையெல்லாவற்றையும் விஞ்சியவை.

சிங்கப்பூரில், பாலியல் (Sex) உரிமைகள் இந்த அளவுக்கு வெளிப்படையாக இல்லை. ஓர் அடக்க ஒடுக்கமான நிலைகளிலேயே அங்கு அந்த உணர்வுகளுக்கு இடம் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய முதலானிய நாடுகளில், பெரும்பாலும் இந்த உணர்வுக்கு எவ்வகைத் தடையுமில்லை. இத்தாலி, பெல்சியம், நார்வே போலும் சில நாடுகளில், பிரான்சு, மேற்கு செர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள நிலைகளைவிட இன்னும் கூடுதலான முறையில் அவ்வுணர்வை வெளிப்படையாகக் கையாளுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

இவ் விடத்தில், இவ்வுணர்வு நிலைகளைப்பற்றி, இயற்கையின் அடிப்படையில் நாகரீகம், பண்பாடு என்னும் மாந்த நடைமுறைகளின் வளர்ச்சிக் கூறுகளின்படி சிலகருத்துகளைக் கூறியாக வேண்டியுள்ளது. பெரும்பாலும் இது பற்றிய கருத்துகளைப் பலரும் பல நோக்கங்களில் என்னிடம் பல விடங்களில் கேட்டிருக்கிறார்கள். தேவையான அளவு விளக்கியிருக்கின்றேன். ஆனால் அதுபற்றிக் கொஞ்சம் வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன். பாலியல் உணர்வு நிலையை மிக இழிவான ஒன்றாகக் கருதியும், நான் அங்குள்ள நாடுகளில் சில பொழுது கண்ட காட்சி நோக்கங்களை ஏதோ ஓர் ஒழுக்கக்குறைவாகவும் பண்பாட்டுக் கீழ்மையாகவும் எண்ணி, என் மேல் வேறு வகையாகக் குற்றம் சுமத்த முடியாத நிலையில், ஐரோப்பியச் செலவில் துணையாக இருப்பார் என்று என்னுடன் அழைத்துச் சென்ற, ஈரோட்டுத் தமிழ்ப் பே(ர்) ஆசிரியர் இங்கு வந்த பின்னர், குற்றமாகவும் இழிவாகவும் கூறியும் எழுதியும் வருவதை ஒரு சிலர் அறிந்திருப்பர். எனவே, இவற்றுக்கெல்லாம் விளக்கமாகவும் துலக்கமாகவும் இந்நிலைகள் பற்றிய என் கருத்தை இங்குக் குறிப்பிடுவது ஒரு கட்டாயமாகவும் ஆகிறது. அன்பர்கள் இவற்றை மிகவும் கவனமாகப் படித்துச் சிந்திக்க வேண்டுகிறேன்.

முதலில் பாலியல் (Sex) உணர்வு என்பது பெரிய குற்றமோ, இழிவோ அன்று. இதை நாம் வெளிப்படையாகப் பேசிக் கொள்ளவும், குழந்தைகளுக்குக் கற்பிக்கவும் ஆன அளவில் இஃது ஒரு கலைக்கல்வி மட்டும் அன்று; அறிவியல் கல்வியும் ஆகும். நமக்கு இயற்கையாக உள்ள பல்வேறு உடல் உணர்வுகளிலும், புலன் இன்பங்களிலும் உள்ள அறிவியல் தன்மைகளைப் போன்றனவே இப் பாலியல் உணர்வும், இன்பமும். இஃது ஏதோ ஒரு கரிசுபோல், வெட்கமுடையதாகவும், கூச்சமுடையதாகவும் அருவருப்புடையதாகவும், நம்நாட்டில் கருதப்படுகின்ற நிலை, நம் மரபு வழிப்பட்ட அறிவுக்குற்றமாகும். வாழ்வியல் முறைகள் என்னும் அடிப்படையில், நாம் எத்தனையோ தவறான கருத்துகளைக் கொண்டவர்களாக வளர்க்கப் பட்டிருக்கின்றோம். நாம் வாழ்வில் கொண்ட எத்தனையோ மூட நம்பிக்கைகளைப் போலவே, அறிவு நிலையிலும், பண்பு நிலையிலும், எத்தனையோ வகை மூட நம்பிக்கைகளைப் பின்பற்றி வருகிறோம்.

பெரும்பாலும் புராண, இதிகாசக் கற்பனை கோட்பாடுகள் நம்மைப் பலவகையிலும் பகுத்தறிவற்றவர்களாகச் செய்திருக்கின்ற நிலையைப் போலவே, பண்பாடு, வாழ்வறிவியல் என்னும் கூறுகளிலும், நாம் எத்தனையோ வகையில் பகுத்தறிவற்றவர்களாகவே இருக்கிறோம். ஆனால், எந்தப் பண்புக்காகவும், ஒழுக்கத்திற்காகவும், நாம் பாலியலறிவை, நம் கல்வி நிலைகளினின்று ஒதுக்கி வைத்தோமோ, அல்லது ஒதுக்கிவைக்கின்றோமோ, அந்தப் பண்பையும் ஒழுக்கத்தையுமே அவ்வுணர்வு நாறடித்து வருகிறது. மலர்களையும், பழங்களையும் பாதுகாக்க வேண்டும் என்னும் நோக்கில், காற்றுப் புகாத சாடிகளில், அல்லது கண்ணாடிப் பெட்டிகளில் போட்டு அடைத்து வைத்து அவற்றை நாறவும், அழுகவும் விடுவதைப் போன்றவை நம் ஒழுக்கப் பாதுகாப்பும், பண்பாட்டு வலியுறுத்தக் கோட்பாடும்.

நம்முடைய வாழ்வியல் ஒழுக்க முறைகளும், பண்பாட்டு நெறி முறைகளும், உலகத்திலேயே சிறந்தன என்று கூறி, நாம் பெருமைப் பட்டுக் கொள்கிறோம். இஃது ஒரு வீண் பெருமையே! குருட்டுத்தனமான, அறியாமை நிறைந்த கூற்றே! மக்களினத்தின் உட்புறச் சிதைவுகளை வளர்த்தெடுக்கும் மனப்பாங்கையே, நாம் ஒழுக்கம் என்றும், பண்பாடு என்றும் பீற்றிக் கொள்கிறோம். அத்தகைய குருட்டுக் கோட்பாட்டால், இன்னும் நாம் பெண்ணினத்தை அடிமைப் படுத்தியும் சீரழித்தும் அறிவு மழுக்கம் செய்தும் வருகிறோம்.

ஒழுக்கம், பண்பாடு என்னும் இரண்டு உயர்ந்த உள நாகரிகத்தின் மாந்த மீமிசைக் கூறுகளைப் பாலுணர்வு அடிப்படையிலேயே நாம் அமைத்திருக்கின்றோம். பாலுணர்வு பிற புலனுணர்வுகளைப் போல ஓர் இயற்கையான உந்துணர்வே ஆகும் என்பதை, நாம் எதையோ கருதிக்கொண்டு, ஒப்புக் கொள்ள மறுக்கின்றோம். ஆனாலும், வெளிக்காகவே இப்படி நடந்துக் கொள்கின்றோமே தவிர, உள்ளுக்குள் அனைவரும், இவ்வுணர்வைப் பொறுத்த அளவில் மன நோயாளிகளாகவே இருக்கிறோம்.

கண் பார்க்கிறது, காது கேட்கிறது; வாய் பேசுகிறது; மூக்கு நுகர்கிறது; உடல் உணர்கிறது. இவை இயற்கை. ஆனால், இவற்றைச் சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்குகிறோம். இங்குதான் நம் முன்னோர்களும் நாமும் செய்கின்ற தவறுகளே அடங்கியிருக்கின்றன. கண் பார்வையை நல்லவற்றில் செலுத்தவேண்டும் என்பதிலும், காது நல்லவற்றைக் கேட்கவேண்டும் என்பதிலும், வாய் நல்லவற்றைப் பேசவேண்டும் என்பதிலும், மூக்கு நல்லவற்றை நுகரவேண்டும் என்பதிலும், உடல் நல்லவற்றை உணர்ந்து துய்க்கவேண்டும் என்பதிலும நாம் ஒருவகையான மரபையே உருவாக்கி வளர்த்துக்கொண்டுள்ளோம் குதிரையின், கண்களுக்கிட்ட கண் படாம்போல், நமக்கு இவ்வுணர்வு வழி வழியாகக் கற்பிக்கப் படுகிறது. ஒரு வகையில் இவற்றில் நல்ல விளைவைக்கூட நாம் கண்டிருக்கலாம். ஆனால், நல்லவை என்பவை எவை என்கின்ற நம் தீர்மானிப்பு, மாந்தன் அறிவில் குறைவான வளர்ச்சி பெற்றிருந்த அந்தக் காலத்திலும், அறிவியல் மிகுந்த வளர்ச்சி பெற்றிருக்கும் இந்தக் காலத்திலும் ஒரே தன்மையுடையனவாக இருக்குமா? எண்ணிப் பார்க்க வேண்டும். அறிவு வளர்ச்சியில், கதிரவனை நிலவு மறைக்கிறது என்று தெரிந்திருந்தாலும், அதை மறைப்பது பாம்பு என்று கருதியிருந்த காலத்தில், அம் மறைப்புக் காலத்தில் நடந்து கொண்ட மூட நம்பிக்கை நடவடிக்கைகளையே, மரபின் - பழக்கவழக்கத்தின் காரணமாக, இன்னும் நம்மில் பலர் நம்பி வருவதைப் போலவே, அறிவு வளர்ச்சிக்குப் பொருத்தமான ஒழுக்கம் என்பதும் பண்பாடு என்பதும் இவைதாம் என்று முன்னைவிட இக்கால் நாம் நன்றாகத் தெரிந்திருந்தாலும், மரபு வழி நேர்கின்ற பிழையால், தவறான நம்பிக்கைப் பின்பற்றுதலால், நாம் இவை யிவற்றைப் பார்க்கக் கூடாது, இவை யிவற்றைக் கேட்கக் கூடாது, இவையிவற்றைப் பேசக்கூடாது, இவை யிவற்றை நுகரக்கூடாது, இவை யிவற்றை உணரக் கூடாது என்று சித்தாந்தமும், வேதாந்தமும் பேசுகிறோம். அப்பொழுதுதான் நாம் ஒழுக்கமுள்ளவர்கள், பண்புள்ளவர்கள் என்று கருதிப்பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால், வெளிக்குத்தான் நாம் அப்படி உள்ளோமே தவிர, உள்ளுக்குள் நாம் அனைவரும் நூற்றுக்கு நூறு வேறாகவே இருக்கிறோம். வேண்டுமானால் அளவுகளில் மாறுபட்டு இருக்கலாம்.

இவ்வகையில், நம்நாட்டைப் பொறுத்த அளவில், பெண் இனத்திற்கு மிக்க கேட்டையும் அடிமைத் தனத்தையும், மூட நம்பிக்கையையும் உருவேற்றியிருக்கிறோம். இந்த நிலையில் அவர்களை வஞ்சித்தும் அவர்களுக்கு இரண்டகம் செய்தும் கூட வருகிறோம் என்று சொன்னாலும் தவறென்று யாரும் சொல்லமுடியாது. உரிமை என்பதும் அடிமைத்தனம் என்பதும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால், இந்நாட்டில், ஆண்கள், அரசியல் நிலையிலும், பொருளியல் நிலையிலும், வேறு பிற உரிமை நிலைகளிலும் அடிமைப் பட்டிருப்பதை உணர முடிகிறது. ஆனால், பெண்கள் இத்தனை நிலைகளிலும் ஆண்களைப்போலவே அடிமைப்பட்டிருப்பதுடன், அவற்றுக்கும் மேலாக ஆண்களுக்கும் அடிமைப்பட்டு, எந்தச் சூழலிலும் அவர்களை மீட்டுக்கொள்ள முடியாதவர்களாக ஆட்பட்டு இருப்பதை நாம் உணர்கிறோமா? உணர்கிறோம் என்றாலும், நம்மைப் பொறுத்த மட்டிலாகிலும் அவர்களை அந் நிலையினின்று விடுவிக்கின்றோமா? எண்ணிப் பார்க்கவேண்டும். நம் நாட்டில் பால் வினையால் வரும் நோய்க்குப் பெண் நோய் என்று பெயர் கொடுத்திருப்பதிலிருந்தே நாம் பெண்களைப் பொறுத்தமட்டில் எத்தனை இழிவான மனநிலைகளைக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணரவேண்டும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

**பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீருவது முயற்கொம்பே!**

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண்: 55 (14-4-85) பகுதி 10-11


## இந்தியாவில் தேசிய இனங்களின் எழுச்சிகள்

உலகெங்கிலும் உரிமைப் போராட்டங்கள் கிளர்ந்து வரும் காலம் இது. இவ்வகையில், ஆங்காங்கு ஒடுக்கப்படும் மக்கள், பல்வேறு வகையாகத் தங்களுக்கு மக்கள் குமுகாயத்திடமிருந்து கிடைக்க வேண்டிய நயமான உரிமைகளுக்காகப் போராடி வருவதை, உலக நோக்கில் கவனம் செலுத்துவார் அறிந்து கொள்ளலாம். அத்துடன் இப்போராட்டங்களை ஆளுமைக்காரர்கள், பலவேறு கோணங்களில ஒடுக்கி வருவதையும் கூடவே உணரலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தியா ஒரே இனமக்கள் வாழும் நாடு அன்று என்பதை அனைவருமே உணர்ந்திருக்கின்றோம். அவ்வவ் இனங்களுக்குப் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அவ்வச் சிக்கல்களுக்காக, அவ்வவ் இனமக்களும், தங்களைத் தேசிய இனமக்கள் என்று உரிமைப் படுத்திக் கொண்டு, ஆங்காங்கு சிற்சில எழுச்சிகளைக் காட்டி வருகின்றனர்.

ஆனாலும், அதிகார ஆளுமைக்காரர்கள், இவர்களுக்குரிய சிக்கல்களையெல்லாம் நன்கு எண்ணிப் பார்த்து அணுகித் தீர்வு செய்ய இயலாமல், அவற்றை வேறுவேறு பெயரால், மூடி மறைக்கவும், அடக்கி ஒடுக்கவும் முயன்று வருகிறார்கள்.

செய்தித்தாள் படிப்பவர்களுக்குப் பஞ்சாப் அசாம், மிசோரம், நாகாலாந்து, ஒரிசா, திரிபுரா, மணிப்பூர் முதலிய இடங்களில் கிளர்ச்சிகளும் எழுச்சிகளும் போராட்டங்களும் சிற்சில பொழுது அரசுத் தாக்கங்களும் நிகழ்ந்து வருவது தெரிந்திருக்கும். ஆனால் அரசு இயந்திரங்கள் இவற்றைப் பல்வேறு வகையாகச் சித்தரித்து அப் போராட்டங்களின் அடித்தளங்களையே மூடி மறைத்து, அவற்றின் முழு வடிவங்களையும் மக்கள் அறிந்து கொள்ளாமல் செய்து வருகின்றன.

ஆனாலும் அவ்வப்பொழுது, ஆங்காங்கு நடைபெறும் கிளர்ச்சிகளும், போராட்டங்களும், அங்குள்ள மக்கள் தங்களின் அரசியல், பொருளியல், வாழ்வியல், மொழி, கலை, பண்பாட்டு உரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக நமக்கு உணர்த்திக் கொண்டுதாம் இருக்கின்றன. எவ்வாறாயினும் இவ்வின வெழுச்சிகளும் போராட்டங்களும், இந்தியாவில் ஆங்காங்கே தேசிய இனங்கள் கிளர்ந்து வருகின்றன என்பதையே நமக்குக் காட்டுகின்றன.

இந்தியா உரிமைபெற்று முப்பத்தெட்டு ஆண்டுகளாகியும், இன்னும் அந்த உரிமைகள், இங்குள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும், பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதை நாம் உணர வேண்டும். இங்கு வருகின்ற நலன்களையும் வளங்களையும் மேல் மட்டங்களில், சாதியாலும், மதத்தாலும், பொருளாலும், அரசியலாலும் மேலாண்மை பெற்ற மிகச் சிலரே சுரண்டிக் கொழுத்து வருகின்றனர். நயமாகக் கிடைக்கப்பட வேண்டிய இவ்வுரிமை நலன்கள் தங்களுக்குக் காலத்தால் கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்கள், அடிபட்டு எழுந்த புலிகளாக அரிமாக்களாகச் சீறியெழுந்து பாயத் தொடங்கியுள்ளனர்.

இவ்வெழுச்சிகளின் உண்மையான உணர்வுகளை முறையாக அணுகித் தீர்வு செய்ய இயலாத அரசு, தேசியம், ஒருமைப்பாடு, ஒற்றுமை என்னும் பெரிய கனத்த போர்வைகளால், மக்களின் வெப்பமூச்சுகளை, எங்கும் வெளியில் தெரியாதவாறு மூடி மறைக்கப் பார்க்கின்றது. இது ஆட்சிக்கும் நல்லதன்று; அது பேசும் தேசிய, ஒருமைப் பாட்டுக்கும் நல்லதன்று என்று மட்டும் இப்பொழுது கூறி வைக்கிறோம். ஆனால், உண்மைகள் காலத்தால் வலுப்பெறாமல் போகாது அன்றோ?

---

• (முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

கிடக்கும் பேராயக் கட்சிகள் இந்த உண்மையை உணர்ந்து, தமிழின உணர்ச்சி பெறவேண்டும்.

இங்குள்ள முன்னணித் தலைவர்கள் பிற சிறிய இயக்க முயற்சியாளர்களை முன்வைக்கக் கூடாதென்னும் சூழ்ச்சியைக் கையாண்டு வருகின்றனர். அவர்கள் வேண்டுவதெல்லாம் பொருளும் புகழும் பதவிகளுமே! இவற்றோடு தமிழின முன்னேற்ற முயற்சியை ஒன்றாகக் கருதிவிடக் கூடாது. எனவே அவர்களின் தன்முனைப்புச் சூழ்ச்சிகளைத் தவிர்த்துக் கொண்டு, தமிழ்த்தேசிய இன விடுவிப்புக்கான முயற்சிகள் அனைத்தையும் ஒன்றுகூட்டி வலிவு படுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு அவர்கள் தவறுவார்களானால், அவர்களின் வரலாறு வெறும் குப்பை மேடுகளாகிவிடும் என்று எச்சரிக்கின்றோம்.

இப்பொழுதுதான், தமிழின விடுதலை முயற்சிகளை முன்வைப்பதற்கான காலம் கனிந்துள்ளது. எனவே காலங் கருதாத வேறு எந்த முயற்சியும் இப்பொழுது தேவையில்லை. இந்தியெதிர்ப்பு கூட, தனி நிலையில், நமக்கு வெற்றியைத் தேடித்தராது. தமிழகம் தனி நாடாவதே இக்கால் நாம் எடுத்துச் செல்லும் முழு முயற்சியாகவும் முதல் முனைப்பாகவும் இருத்தல் வேண்டும். அதற்குத் தமிழினம் ஒன்று பட்டாகல் வேண்டும். தமிழினமே ஒன்றுபட்டு இயங்குக! 0

## நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-4

### - கழக முதல்வர் -

25 : 17: அன்று திரு. ம. கோ. இரா. அவர்கள் தி.மு.க.-வினின்று நீக்கப்பெற்று, அ. தி. மு. க.-வை அமைத்த புதிதில் (1972-73 இருக்கலாம்), இக்கால் பிரான்சு உ. த. மு. க. அமைப்பாளராக உள்ள திரு. அரிமா வளங்கோ அக்கால் புதுச்சேரியில் இருந்தார். அவர் ம. கோ. இரா.விடம் நெருங்கிய தொடர்பு உள்ளவர். அவரின் வேண்டுகோளுக் கிணங்கி, திரு. ம. கோ. இரா. அவர்கள் நம்மையும், பாவாணர் அவர்களையும் அவருடைய இலாயிட்சு சாலை வீட்டிற்கு அழைத்து, மூன்று மணி நேரம் தனி அறையில் விரிவாகப் பேசினார். அக்கால் எங்களுடன் எவருமில்லை. ம. கோ. இரா. தலைக் கவிப்பும், கறுப்புக் கண்ணாடியும் இல்லாமல்தான் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது, எங்கள் இருவரையும் தம் கட்சியில் சேர்ந்து, தமக்கு ஆதரவளிக்கும்படி கோரினார். நாம் சொன்னோம்: "பாவாணர் அகர முதலி ஒன்று எழுதத் திட்டமிட்டுள்ளார். அதற்குப் பெருந்தொகை ஒன்று வேண்டும். அவர் காற்றுப் போன்றவர்; ஆற்றைபோன்றவர். எவரும் அவருடன் சொந்தம்கொண்டாடலாம். எனவே, அவருக்கு மூன்று இலக்கம் உருபா கிடைப்பின், அவர் எவர்கட்சியிலும் சேரலாம். ஆனால், அவரால் கட்சிக்கு ஒன்றும் பயன் கிடைத்து விடாது. விளம்பரத்துக்காக வேண்டுமானால் கட்சி அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், கட்சியிடமிருந்து அவருக்குக் கிடைக்கும் பணமோ, தமிழுக்குப் பயன்படும். வேண்டுமானால் எண்ணிப் பாருங்கள்" என்றோம். ம. கோ. இரா.-வோ, நாமுந்தாம் அவர் கட்சியில் சேரவேண்டும் என்பதையே விரும்பி வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். நாமோ, நாம் சாகும் வரையிலும் எந்தக் கட்சியிலும் சேரமாட்டோம். நம்மைத் தமிழுக்காகவே ஆட்படுத்திக் கொண்டுள்ளோம்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டு வந்தோம். அக்கால், இப்பொழுது அமைச்சராகவுள்ள முகாமையான பலபேர் அக்கட்சியில் சேரவில்லை.

25 : 18: இச் சந்திப்பிற்குப் பின்னும் திரு. ம. கோ இரா. ஓரிரு முறை திரு. வளங்கோ வழி நம் விருப்பத்தைக் கேட்டனுப்பியிருந்தார். அப்பொழுதெல்லாம் கூட முன் சொன்ன விடையே நம் விடையாக இருந்தது. அக்கால் நாம் அ. தி. மு. க.-வில் சேர்ந்திருந்தால், நம நிலை எவ்வளவில் உயர்ந்திருக்கும் என்று அன்பர்கள் கற்பனை செய்து பார்க்க வேண்டுகின்றோம். உயர்ந்திருக்காவிடினும் அக் கட்சியில் இன்றுள்ளவர்களை விட எவ்வகையானும் தாழ்ந்து போயிருக்காதென்பதாவது உறுதியாக இருந்திருக்கும். ஆனால், அதற்காக நாம் அன்றும் வருந்தியதில்லை; இன்றும் ஏங்கியதில்லை. நமக்குத் தமிழும், தமிழினமும், தமிழ் நாடுமே முகாமையான முன்னேற்றக் குறிக்கோள்களாக இருந்தமையால், எந்த இழப்புப் பற்றியும் நாம் என்றுமே கவலைப்பட்டதில்லை.

அடுத்து, தி. மு. க. - வில் சேருவதற்கு வந்த வாய்ப்புகள் பற்றிச் சில கூறியாகல் வேண்டும்.

25 : 99: 1849-50 என்று கருதுகின்றேன். (தி.மு.க. தொடங்கிய புதிது) சேலம், சலகண்டபுரம் ப. கண்ணன் ('பகுத்தறிவு' மாத இதழ் ஆசிரியர்) நமக்கு நல்ல நண்பராக இருந்தவர். அக்கால் நாம் பள்ளி இறுதி வகுப்பு முடித்துக்கல்லூரியில் சேர்வதற்குரிய மாணவர் பருவத்தில் இருந்தோம்

சேலம், விக்டோரியா திறந்த வெளியில் ஒருநாள் தி. மு. க. பொதுக்கூட்டம் நடக்கவிருந்தது. அதில் அண்ணா அவர்களும், பங்கு கொள்ள வந்திருந்தார். கூட்டம் நடைபெறுவதற்கு - ஒரு மணி நேரத்திற்கு முன், மேடைக்குப் பின்புறம் இருந்த தீ அணைப்பு அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி அறையில் அன்று பேசவிருந்த பேச்சாளர்கள் கூடியிருந்தனர். அண்ணா அவர்களும் அங்கிருந்தார். கண்ணன் அண்ணாவைப் பார்க்க விரும்பி அறைக்குள் சென்றார். நாமும் அவருடன் உள்ளே போனோம். உள்ளே போன கண்ணன் அண்ணாவிடம் பேசிக் கொண்டிருந்தார். அவ்வேளையில், நாம் சற்றும் எதிர்பாராத வகையாக, திரு. கண்ணன் அவர்கள் நம்மை அண்ணாவிடம் அறிமுகப்படுத்தினார். 'அண்ணா இவர் நல்ல தமிழுணர்வுள்ள கல்லூரி மாணவர்; நன்றாகப் பாடல் எழுதுவார். இவர் பாடல்களைத் 'திராவிட நாடு' இதழிலும் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இவருக்கு நாம் ஆதரவும் தரவேண்டும்", என்று கூறினார். அதற்கு அண்ணா 'அப்படியா' ஆகட்டும். இப்படிப்பட்டவர் நம் இயக்கத்திலேயே ஈடுபட்டு இயங்கலாமே என்றார். அதற்கு, "இல்லை ஐயா, நான் எந்தக் கட்சியிலும் பங்கு கொள்ள விரும்பவில்லை" என்று ஒரே மறுப்பாகக் கூறிவிட்டோம். ஆனால், உண்மையில் பெரியாரை விட்டுப் பிரிந்த நிலையில் அண்ணா அவர்கள்மேல் நமக்குப் பெரு வருத்தமும், அடங்காத சினமும் இருந்தது. அதனாலேயே வேறு பேச்சுக்கு இடம் வையாதபடி ஒரே முடிவாக அவரிடம் அவ்வாறு கூறநேர்ந்தது. நம் மனம் ஏதோ ஒரு கட்சியில் சேரவேண்டும், அந்த வகையில் ஏதாவது பதவிகளையோ அவற்றின் வழி வருமானங்களைப் பெறுவதையோ விரும்பியிருந்தால், நாம் அன்றே அண்ணா அவர்களின் முன்னிலையிலேயே தி. மு. க.-வில் சேர்ந்திருக்கலாம். கட்சியும் புதியது; நாமும் அவர்கள் விரும்புமாறு ஒருவகைத் தகுதியுடனும் இருந்தோம். அப்பொழுதிலிருந்தே ஈடுபாடு கொண்டிருப்பின் எல்லா வாய்ப்புகளும் இருந்திருக்கலாம். ஆனால், அதுபற்றியெல்லாம் நம் மனத்தில் என்றுமே ஓர் எண்ணம் எழுந்ததில்லை.

25 : 20: அதன் பின், பலமுறையும் நம் நெருங்கிய அன்பர்கள் பலரும் நம்மை அக் கட்சியில் சேரும்படி கேட்டுக்கொண்டனர். வற்புறுத்தினர். தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின்னரும் அவ்வேண்டுகோள் தொடர்ந்திருந்தது. ஆனால், எப்பொழுதுமே அத்தகைய உணர்வு நம் உள்ளத்தில் தோன்றியதே இல்லை.

25 : 21: தென்மொழி தோன்றிய பின்னர் கூட, அதில் நம் எழுத்தைப் படித்த பலரும், தி. மு. க.-வைச் சார்ந்தவராக நாம் இருப்போமோ என்று எண்ணியதாக, நாம் கேள்விப் பட்டதுண்டு. அதனால், 1962, 63 64, 65-ஆம் ஆண்டுகளில், நம் ஆசிரியவுரைகள் பல, கலைஞரின் முரசொலியில் மறு வெளியீடு ஆனதுண்டு. பின்னர் நாம் வெளிப்படையாக தி.மு.க. பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும், திறனாய்வு செய்த பின்னர்தான், நம் தி.மு.க. இல்லை என்று தெரிந்து கொள்ளப்பட்டது. அதன்பின் தி. மு. க. வெளிப்படையாகவே நம்மை வேண்டாதவராகக் கருதலானது. மறைமுகமாக நம் வளர்ச்சிக்கும் இடையூறு செய்தது. இதற்குப் பல சான்றுகளுண்டு. இரண்டு சான்றுகளை மட்டும் கட்டாயத் தேவையாகக் கருதி இங்கெடுத்துக் கூறுகிறோம்.

25 : 22: பாவாணர் காட்டுப்பாடியில் குடியேறி யிருந்தார். அவருக்குப் பொருள்நிலையில் பல இக்கட்டு. அக்கால் யாரோ ஒரு சிலர் அவரைத் தி.மு.க.-வில் சேரச்சொல்லிக் கட்டாயப் படுத்தியதன் பேரில், அவர் தி.மு.க.-வில் சேர்ந்துவிட்டதாக முரசொலியில் அறிவிப்பு ஒன்று வந்தது. அப்பொழுது தென்மொழி கடலூரில்இருந்தது. செய்தி நமக்குக் கிடைக்கவே, நாம் உடனே காட்டுப்பாடி சென்று, பாவாணரைத் தெருட்டி, 'நம்மைப் போன்றவர்கள் அரசியல் கட்சிகளில் சேர்வது தமிழுக்கு இடையூறாக இருக்கும்' என்று பலவாறாகக் கூறி, அத் தொடர்பை மேற்கொண்டு வலுப்பெறாதவாறு செய்தோம்.

இதை மனத்தில் வைத்துக்கொண்டு நாம் திருச்சி அசோகா விடுதியில் உ. த. க.- வைத் தொடங்க, பாவாணருடன் ஓர் அமைப்புக் கூட்டத்தை நடத்தினோம். அக் கூட்டம் இரண்டு நாள்கள் நடந்து முடிந்தது. அக் கூட்டத்திற்கு வந்திருந்த அன்பர்கள் அனைவரும் தம் தம் ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். நாமும் பாவாணரும் மட்டும் அன்று பிற்பகல் புறப்பட விருந்தோம். நெருங்கிய நண்பர்கள் ஓரிருவர் எங்களுடன் இருந்தனர்.

அக்கால், பாவாணரைப் பார்க்க, சென்னையிலிருந்த தி. மு. கழகத்திற்கு நெருங்கிய தொடர்புள்ள தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் வந்திருந்தார். (பல நன்மை கருதி அப் பேராசிரியர் பெயரையும் இங்கு நாம் வெளிப்படுத்த விரும்பவில்லை.) அவர் பாவாணர்க்கும் மிக வேண்டியவர். அவர் பாவாணரை அழைத்து வேறொரு தனியறையில் ஒரு மணி நேரத்துக்கு மேலாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம் மிக நெருங்கிய அன்பர் ஒருவர் மறை

(6-ஆம் பக்கம் பார்க்க)

(புன்னிதழ்த் தொடர்ச்சி) தொடர்—2.

# இந்திய அரசு உசாவல் (விசாரணைக்) குற்றவாளிகளுக்குச் செய்யும் கொடுமைகள்!

(சிங்களத்தில் தமிழர்களுக்குக் கொடுமைகள் நேர்வதைச் செய்தித் தாள்களில் படித்துத் துடிப்புறுகிறோம். இந்தியாவில் மட்டுமென்ன வாழ்கிறது? படித்துப் பாருங்கள்.)

தலைமை அறமன்றக் கட்டளையாக இருந்தும், பீகார் அரசு அதைத் தூக்கி மூலையில் போட்டது. நான்கு மாதங்களுக்குப் பின், நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாதது கண்டு அரசைக் கேட்டபோது, 'இராதுல் சா தான் இப்போது வெளியே வந்துவிட்டாரே இன்னும் என்ன?' என அமைதியாக விடை கூறியது. அறமன்றம் நிறைவுபெறவில்லை. காரணம் கேட்டது. வந்த விடை என்ன தெரியுமா? இராதுல் சா மனநோயுற்றவன். 1968-இல் இராதுல் சா-வைக் குற்றமற்றவன் என்று தீர்ப்பளித்த அந்த நடுவர், மேற்கொண்டு, அரசிடமிருந்து கட்டளைகள் வரும் வரை, அவரைச் சிறையில் வைத்திருக்கும்படி தீர்ப்பில் கூறியிருக்கிறார்' எனக் கூறப்பட்டது. ஆனால், அவனை மருத்துவ ஆய்வு செய்ததற்கோ, அவன் ஒரு மனநோயாளி என்பதற்கோ சான்றுகள் ஏதும் வைத்திருக்கவில்லை. சிறையதிகாரியின் அறிக்கைப்படி, தீர்ப்பு வழங்கியபோது, 'சரியான மன நிலையில், இராதுல் சா இல்லை. (இதுவும் சான்றில்லாத, கூற்றேயாகும்.) எனவேதான் சிறையில் வைத்திருந்தோம்', எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், பலகாலம் கழித்து, 1977 - இல் இராதுல் சா-வை ஆய்வு செய்த மருத்துவர், அவர் நல்ல மன நலத்துடன் இருப்பதாகக் குறிப்பிட்டார், ஆனால், அப்போதும் அவர் விடுதலை செய்யப்படவில்லை. 5 ஆண்டுகள் கழித்து, 1982 இல் தான் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்கண்ட விளத்தங்களை வைத்துப் பார்த்த தலைமை அறமன்றம், பீகார் அரசைக் கண்டித்தது. இடைக்காலத் துயர ஈடாக உரு! 30,000 கொடுக்க ஆணையிட்டது. மேலும், இதுபோல் இராதுல் சாக்கள் எங்குமில்லாமல் பார்த்துக் கொள்ளுமாறும் பீகார் அரசைக் கேட்டுக் கொண்டது.

இந்த வழக்கு அரசின் பொறுப்பற்ற தன்மையை வெகுவாகச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு மாந்த உயிர் சிறையில் அடைபட்டிருப்பது குறித்து, ஓர் அரசு, எந்த வகையான அக்கறையுமில்லாது அவனை ஒரு மனநோயாளி எனக்கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. கிடைக்கும் 30 ஆயிரம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவர் இழந்தது அவர் வாழ்வின் பொன்னான 14 ஆண்டுகள். குற்றம் சாட்டப்பட்ட உசாவல் குற்றவாளியாகக்கூட அன்று. குற்றமற்றவராக, அதுவும் எங்கே? அளறு (நரக) உலகத்தைப் போலுள்ள பீகார் சிறைச்சாலையில். ஆக, இதிலிருந்து தெரிவதென்ன? நீங்கள் குற்றமே செய்யாத -ஒன்றுமறியாதவராகக்கூட இருக்கலாம். சிறை அதிகாரிகளும், சட்ட அதிகாரிகளும் நினைத்தால், உங்களை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் சிறையில் வைத்திருக்க முடியும். கேட்டால், எளிதாகச் சொல்லிவிடலாம், நீங்கள் மன நோயாளி என்று.

### இதுதான் நாம் வாழும் உரிமை உடைய குடியரசு இந்தியா!

பம்பாய் சிறையிலிருந்த பெண் குற்றவாளிகள் குறித்துத் தலைமை அறமன்றம் கூறிய கருத்துகளைப் பார்ப்போம். பம்பாய் காவல் நிலைய அடைப்புகளில் (லாக்கப்புகளில்) பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து சிலா பார்சு எனும் செய்தியாளர் தொகுத்த வழக்குத் தொடர்பானவை இவை. தேவம்மா, புட்பா பயீன் எனும் பெண்கள் காவலில் இருக்கும்போது, தமக்கிழைக்கப் பட்ட கொடுமைகளை அறமன்ற நடுவர் முன் கூறினர். அப்போதுதான் மோகன் அத்வானி எனும் வழக்குரைஞர், செர்மன், தாய்லாந்து நாட்டுப் பெண்களை ஏமாற்றிய விளத்தங்களும் வெளிவந்தது. அப்போது பெண் காவல் குற்றவாளிகளைப் பாதுகாப்பாக நடத்தவேண்டிய வழிமுறைகளை அறமன்றம் வகுத்தளித்தது.

ஆனால், இவற்றையெல்லாம் குறித்து யார் கவலைப்படுகிறார்கள்? அப்படிக் கவனித்திருந்தால் 3 இலக்கம் உசாவல் குற்றவாளிகள் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. குற்றவாளிகளல்லாத மன நோயாளிகள் மிகக் கீழான-இழிவான நிலைமைகளில் மேற்கு வங்காளச் சிறைகளில் தொல்லைப்பட முடியாது. ஒரிசாவின் சிறைகளில் 194 குழந்தைகள் துன்பப்பட நேரிடாது.

மாந்த உயிர்களின் துன்பங்களைப் பற்றிப் பேசுகையில், எண்ணிக்கைகள் ஒரு பொருட்டன்று. எனினும், அதற்காக விளத்தங்கள் என்பன தேவையில்லாமலும் போய்விடவில்லை. எடுத்துக்காட்டாக, சனவரி 1981-இலிருந்து, மார்ச்சு 82 வரை 400 உசாவல் குற்றவாளிகள் காவலில் இருக்கும்போது இறந்திருக்கின்றனர். ஆனால், ஏன் இறந்தனர் என்பதற்கான சரியான கரணியங்கள் ஏதும் காட்டப்படவில்லை. இது உள்துறை அமைச்சரே பாராளுமன்றத்தில் தெரிவித்த செய்தியாகும். சிறையறைகளில் அவர்கள் எப்படியெல்லாம் உறுப்புச் சிதைவு செய்யப்படுகின்றனர் என்பதை அறிந்திருக்கும் நமக்கு இந்த இறப்புகளின் கரணியங்களை ஒருவாறாகக் கருதமுடிகிறது.

தில்லி, உயர்நெறி மன்ற நடுவர் இராசிந்தர் சாகர், சென்ற ஆண்டில் ஒருநாள் ஒரு செய்தித்தாள் தலைப்பைக் கண்டு திடுக்கிட்டார். திகார் கொத்தடிமை என்பதே அதன் தலைப்பு. அந்தச் செய்தியுடன் கூடவே, சிறு குற்றங்களுக்காகக் கொண்டு வரப்படும் குற்றவாளிகளைச் சிறைச்சாலை அதிகாரிகளும், பழைய கடுங்காவல் சிறையாளர்களும், தங்கள் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை மெய்ப்பிக்கும் சிறைச்சாலைக் குறிப்பேட்டுப் படியையும் இணைத்திருந்தனர். இந்த எழுதப் படிக்கத் தெரியாத குற்றவாளிகளின் கைவரைப் பதிவு வாங்கிக்கொண்டு, இந்தச் செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதையும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியது.

இத்தகைய அத்துமீறல்களினால் கவலைக்கொண்ட நடுவர் அரசிற்கு விளத்தம் கேட்டுக் கடிதம் எழுதினார். மேலும், இந்தச் செய்தியை வெளியிட்ட செய்தியாளர்களுடன் தொடர்புகொண்டு, இதனைப் பற்றி உசாவிட தம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி அந்தச் செய்தியாளர்கள் இச்செய்தியை மெய்ப்பிக்கும் குறிப்புகளை அறமன்றத்திற்கு எடுத்து வந்தார். அதன்பிறகு அறமன்றம் ஒரு குழுவை அமர்த்தியது. அந்தக் குழு திகார் சிறைக்குச் சென்று, சிறைக் குறிப்புகளைப் பறிமுதல் செய்தது. இந்தக் குழுவில் செய்தியாளர் முகாமை உறுப்பாண்மை பெற்றார். ஆகவே, அவர்மீது சிறைக் குறிப்புகளைத் திருடியதாக, அரசுத் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், நல்லவேளை அந்த நடுவர், இதுபோன்ற புலனங்கள் செய்தித் தாள்களில் வெளியிடப்பெறாமல் இருந்திருந்தால், அத்து மீறல்கள் பற்றி நாங்கள் அறிந்திருக்க முடியாது என்று கூறிச் செய்தியாளருக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் உறுதி கூறினார். இதுபற்றிய உசாவலில் அதிகாரிகள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டனர். ஆனால், கொத்தடிமை முறை தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இதுபோன்று, அரசு மக்களை அச்சுறுத்த, உறுப்புச்சிதைவுக் கொடுமையை எழுதப்படாத சட்டம் மூலம் ஈவிரக்கமின்றிச் செயல்படுத்தியே வருகிறது. எத்தனையோ நிகழ்ச்சிகள் இதனை மெய்ப்பித்தபடி உள்ளன.

எந்த ஒரு குழுவும் கட்சியும் தன் ஆளுமைக்குக் கீழ் மக்களைக் கொண்டு வருவதோடு, அதனை எதிர்த்து வரும் எந்தவகையான எதிர்ப்புக் குரலையும் நசுக்கி ஒடுக்கியே வருகிறது. இந்த ஒடுக்கு முறைகளை சட்டமாக்கிச் செயல்புரிகிறது. இதை மக்கள்நாயக முறை என்றும், சட்டத்திற்குட்பட்டவை என்றும் கூறி, ஒடுக்கு முறையை நயமைப்படுத்தியே தொடர்கிறது.

இத்தகைய நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கப்பட்டாலும், அதற்குக் கரணியமானவர்களைத் தண்டிக்காமலும், சட்டங்களைத் திருத்தாமலும், ஒருசில அதிகாரிகளை மட்டும் இதற்குக் கரணியம் காட்டி, அவர்களைப் பலி கடாவாக்கி விடுகிறது.

முற்போக்குக் கட்சி என்று கூறும் சி.பி.எம். ஆட்சியும் கூட, இந்த முறைகளைத் தொடர்கிறது. எடுத்துக்காட்டாக, மேற்கு வங்கத்தில், 1980 - இல் 9 உசாவல் குற்றவாளிகளைக் காவல் துறை கொன்றது. 1981 - இல் 11 ஆகவும், 82-இல் 13 ஆகவும் இப்பட்டியல் நீடிக்கிறது. செய்தித்தாள்கள், மேற்கு வங்கத்திலுள்ள டம்டம் சிறைச்சாலையின் கோர நிலையை வெளிக்கொண்டு வந்தபோது, அரசு அதனை மறுத்துச் சிறையில் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டே நடக்கிறது என்று பொய் கூறியது. இப்படி மக்களை ஒடுக்குவதில் மற்ற பேராயக் கட்சி, சனதா, அண்ணா தி.மு.க. போன்ற கட்சிகளின் ஆட்சிகளும் நெறிவிலக்கல்ல,

அத்து மீறல்களை எதிர்ப்பதாகக் கூறும் எந்த ஒரு கட்சியும், தான் ஆட்சிக்கு வந்தவுடன் அவற்றையே தொடர்கிறது.

'சட்டம் தன்னளவில்தான் செயல்படுகிறது' — என்று அரசு கூறுகிறது. ஆனால், இத்தகைய அத்துமீறல் கொடுமைகள் ஏற்படும் வகையில் சட்டம் தன்னளவாகச் செயல்படுவதில்லை.

அரசுதான் மிகக் கொடுமையான உறுப்புச் சிதைவுகளைச் சட்டத்தின்மூலம் மக்களை அச்சுறுத்தப் பயன்படுத்துகிறது. இத்தகைய சட்ட வரிசையில் இப்போது கொண்டு வரப்பட்ட அஞ்சத்தக்க கொடுமைச்சட்டம் தீவிர நடவடிக்கையாளர்களை ஒடுக்கும் சட்டம். இது பஞ்சாபில்தான் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்றாலும், அனைத்து மாநிலங்களுக்கும் இது பொருந்தும்' இந்தச் சட்டத்தின்படி யார் வேண்டுமானாலும், தளை (கைது) செய்யப்படலாம். எந்த உசாவலும் இன்றி, இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை கொடுக்கப் படலாம். இந்தச் சட்டத்தின்படி உங்கள் வழக்கு உசாவல்கூட கமுக்கமாக நடத்தப்படும். இத்தகைய விளத்தங்கள் பொதுவான எளிய மாந்தனின் மனதைத் தாக்கும் வகையைச் சிந்தித்துப் பாருங்கள். ஏனெனில், உசாவல் குற்றவாளியாக இருப்பது என்பது என்னவென்று இப்போது நமக்கு நன்றாகத்தெரியும். இந்த வகையான அச்சத்தைப் பரப்பியே, அரசு மக்களைத் தனது வல்லாண்மைக்குள் வைத்துக்கொள்ள பார்க்கிறது.

### சட்டம் யாரை வேண்டுமானாலும் உசாவல் குற்றவாளியாகக் கருதலாம்.

பிரிவு 124-ஏ அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களாகக் கருதப்படுபவர்கள் யார் என்று கூறுகிறது? அதன்படி,

இந்திய அரசை எதிர்த்தோ அல்லது அரசுமீது கருத் வெறுப்பை வெளிக்காட்டும் எந்தவகையான அறிகுறிகளைத் தையோ அல்லது அம் மாதிரியான கருத்துகளையோ, வெளியிடும் ஆள்-தாங்கிவரும் பேச்சு மூலமாகவோ அது எழுத்து மூலமாகவோ அமைந்தாலும்-அவருக்கு வாழ்நாள் காலச் சிறைத் தண்டனை மற்றும் தண்டத்தொகை அல்லது இரண்டும் சுமத்தப்படலாம்.

அஃதாவது, அரசு மீது நிறைவற்று ஒரு சொல் பேசினாலும் கூட உங்களுக்கு வாழ்நாள் தண்டனை கொடுக்கப்படலாம்.

நமது பேச்சு, கருத்து உரிமைகளை இச்சட்டம் அடியோடு கிள்ளி எரிகிறது.

உண்மைகள் எவ்வளவுதாம் கொடுமையாக இருந்த போதிலும், அவற்றைக் கண்டு பேசாமல் இருந்தாலும். நம்பிக்கையின்மை கொண்டு ஏதும் செயல்படாமல் இருந்தாலும், நிலைமைகள் நாளுக்கு நாள் கேடாகிக் கொண்டுதான் போகும். இந்த அடக்குமுறைகளை எதிர்த்து எந்தவகையில் போராடலாம் எனப் பார்க்கவேண்டும். எனவே, தற்போது, முன்னெப்போதையும் விட நமக்கு வலிமையான தேசிய அளவில் மக்கள் நாயக (சன நாயக) உரிமை இயக்கம் இப்போது தேவைப்படுகிறது.

ஆனால், நம் நலக்கேடாக இங்குள்ள அரசியல் கட்சிகள் மக்கள் நாயக மாந்த உரிமைகளுக்கு முன் உரிமை கொடுப்பது இல்லை. அவர்களுக்கும் இதைப் போன்ற அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டுள்ள அரசு கருவிகளைக் கைப்பற்றி மக்களை அடக்கி அரசாளவே விருப்பம். நம்முன் இருக்கும் ஒரேவழி ஒழுங்காகக் கட்டியமைக்கப்பட்ட மாந்த உரிமை இயக்கங்களின் மூலமாக மக்களுக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய மக்கள் நாயக மாந்த உரிமை அத்து மீறல்களை எதிர்த்து நாம் வலுவாகக் குரல் எழுப்பவேண்டும். இதன்மூலம் அரசு இயந்திரத்தின் ஒடுக்குமுறைகளை நிலை குலைய வைக்கமுடியும் என இத்தகைய இயக்கங்களின் பட்டறிவுகள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே, இந்த அரசின் கீழ் நாம் எப்போதும் உசாவல் குற்றவாளிகளே என்பதை உணர்ந்து, அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரணியில் நிற்கும் பெரும்பான்மை மக்களின் கூட்டமைப்பை ஏற்படுத்தி, அத்துமீறல்களை வெளிக் கொணர்ந்து, தகுந்த எதிரடி கொடுக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதோடு, இத்தகைய அடக்கு முறைகளுக்கும் அத்துமீறல்களுக்கும் தேவையிருக்காத ஒரு குமுகாய மாற்றத்திற்காகவும் அதை முன்னெடுத்துச் செல்வதையும் தவிர்த்து வேறு எதுவும் செய்ய இருப்பதாகத் தெரியவில்லை.

(செமினார் 84-ல் இருந்து, தொகுப்பு: மோகன்.)

(நன்றி: 'தேன் மழை', சன-பிப். 85)

— தூய தமிழ் ஆக்கம்: 'தமிழ் நிலம்'.

---

### அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

-அமைச்சர்.

---

# சட்டம் வேறு; நடைமுறை வேறாக உள்ளது!

# 1965 - 1985

ஈராயிரம் ஆண்டுகளாக அடிமைச் சகதிக்குள் மூழ்கித் தூங்கிக் கொண்டிருந்த தமிழன் இடையில் விழித்துப் பார்த்து மீண்டும் தூங்கத் தொடங்கி இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன.

முதல் முறையாகத் தன்னை அடிமைப் படுத்திய வகையில் அவன் தூங்கத் தொடங்கும்பொழுது, அவன் கொண்டிருந்த தாய்மையான தமிழ்மொழியின் வளமும், ஒன்றுபட்டிருந்த இத் தமிழினத்தின் உரமும், வளம் கொண்ட இந்நாட்டின் தன்னிறைவுச் சிறப்பும்; பண்பாடு, நாகரிகத்தில் மிக்கோங்கி இருந்த இவ் வினத்தின் அப்பழுக்கற்ற அறிவு வளர்ச்சியும் அய்யகோ, எண்ணுகையிலே உள்ளம் குளிர அச் செம்மாந்த தமிழனைக் காண உணர்வுகள் அலமருகின்றனவே..!

அக்கால் அவன் தூங்கத்தொடங்கி, படிப்படியாக ஒவ்வொரு வகையிலும் அடிமையானவன், வெளிப்படையாகத் தங்கள் மொழி அழிக்கப்பெற்று வேற்றுமொழி ஆளுமைக்குக் கொண்டு வரப்பெறுகிறது என்பதறிந்து..

அவன் துடித்த துடிப்பும்...

எந்தமிழ் மாணவர்கள் கொதித்த கொதிப்பும்...

இவ்விந்தியத் துணைக் கண்டத்தை அலற அல்லவா வைத்தன.

ஐயகோ...! இன்று...!

அவனின் புடைத்திருந்த உணர்வு நரம்புகளுக்குள் நச்சு நீர் வார்த்து விட்டனரே!

உணர்வேறித் திமிர்ந்திருந்த நெஞ்சின் உள்ளிருந்து வீர உணர்வுகளை வேரோடு பிடுங்கி விட்டனரே...!

தமிழா... நீ விழிப்பாயா...?

எதையும் வெளிப்படையாகப் பேசிப் பழகிவிட்டவன் நீ!

—எவரையும் நேருக்கு நேராக எதிர் கொண்டவன் நீ!

—அதனால்தான் உன்னால் ஆரியத்தின் நச்சுணர்வுகளுக்கு எதிர்கொள்ள இயலவில்லை!

உன் உடன் இருந்தே உன் உணர்வுகளை, எண்ணங்களை, சிந்தனைகளைச் சுரண்டி விழுங்கி விட்டு வற்றின் நச்சரைகளை உள் செலுத்தி உன்னை அடிமை கொண்டனவே!

—உனக்கு நட்பாய் இருந்தே நீ பகைவன் வெளியில் இருப்பதாய் எண்ணும்படி செய்துவிட்டு உன் வீரத்தை, அறிவை, மழுங்கடித்து விட்டனவே...!

— அதைத்தான் நீ இன்னும் உணரவில்லையா ?..,

இந்தியை உன் வலிய தோள்களினால் முட்டித் தள்ளிவிட்டு, நீ உறங்கச் சென்றுவிட்டதைக் கண்டு இந்த இருபதாண்டுக்குள் நீயே அதை விரும்பி ஏற்குமளவோ அல்லது விரும்பாமல் ஏற்குமளவோ செய்து விட்டதே பார்ப்பனியம்!

உன் வீரம் எப்படிக் கோழைமைத் தனத்திடம் அடிமை கொண்டது பார்த்தாயா?

— உன் அறிவு எங்ஙனம் காரறிவிடம் தோற்றுப் போனது கண்டாயா?

— ஐயோ...தமிழனே

உன்னை அறியாமலேயே நீ முடங்கிவிட்டாய் உணர்ந்தாயா?

* இந்திக்கெனவும், சமற்கிருதத்திற்கெனவும் ஆண்டுக்கு நூறு கோடி உருபாக்கள் அவற்றின் வளர்ச்சிக்கென செலவிடப்படுகின்றனவே?

—நீ உன் தமிழுக்கு என்ன செய்தாய்? உன் அன்னைத் தமிழ்; இனிமைத் தமிழைப் பேசவாவது செய்கிறாயா?

* வட இந்திய அலுவலகங்கள் முழுக்க இந்தியே ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப் பெற்று வருவதுடன், தென் இந்தியாவில் மட்டும் இந்தியும் ஆங்கிலமும் என அமைக்கப் பட்டுள்ளனவே?

—இவ்வகையில் நீ நடுவணரசு அலுவலகங்களில் தமிழ் மட்டும் தெரிந்துகொண்டு பணி செய்ய இயலாமல் போகும்பொழுது, ஆங்கிலமோ, இந்தியோ கட்டாயமாகப்படிக்கவேண்டியவனாய்ப்போகின்றாயே? அதற்காகத்தான் ஆட்சியாளர்கள் உனக்கு மாலை நேரங்களில் இலவயமாக அலுவலகங்களிலேயே இந்தி கற்றுக் கொடுக்கின்றனரே!

* இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இந்தி பாடமாக வைக்கப் பெற்றிருக்கும்பொழுது, தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களிலே கூட தமிழ் இன்னும் பாடமாக இல்லாமல் இருக்கின்றதே ?

- இந் நாட்டை ஆண்ட, இம் மண்ணுக்கு உண்மையிலேயே உரிமையான நீ, இப்படி ஏமாற்றம் அடைந்த கோழையாய் நின்று வேடிக்கை பார்க்கிறாயே?

* இந்தியில் ஆய்வு செய்பவருக்கு, மற்ற மொழிகளில் ஆய்வு செய்பவரை விட உரு. 250 அதிகமாக மாத உதவித்தொகை கொடுக்கின்றதே அரசு !

- உள்நாட்டு முதலாளிகளை உதைத்து வாங்குகின்ற நீ, உண்மையான கொழுத்த வடநாட்டுப் பார்ப்பனிய முதலாளிக்கு ஏன் தொடை நடுங்குகின்றாய்?

* ஐ.ஏ.எசு., ஐ.பி.எசு. போன்ற உயர் பதவித் தேர்வுகள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டும் நடக்கின்றன. இத் தேர்வைத் தமிழர்களோ, பிற திரவிட மொழிக் குடும்பத்தினரோ தங்களின் இரண்டாம் மொழிக்கு உள்ள தகுதி நிலை கொண்டே எழுதி வெற்றிபெற வாய்ப்பில்லாமல் போகிறது.

- உன் பகைவன், உன் நாட்டைப் பிடுங்கி வைத்துக்கொண்டு அவன் மொழியில் உன்னை விடை எழுதக்கேட்டு, நீ உன் மொழியில்லாமல் வேறொரு மொழியில் எழுதித் தோல்வி அடியும் இவ் வடிமைத் தனத்தை என்று நீ உணர்வாயோ?

* தமிழகத்திலிருந்து கிடைக்கும் இரும்பைக் கொண்டு தமிழகத்திலிருந்து உருவாக்கப் பெறும் தொடர் வண்டிக்கு அவன் இந்தியில் 'பெயர்' சூட்டு விழாவெடுத்து இந்தியே எழுதிவிட, நீ அதில் குந்தி மகிழ்கிறாயே? - ஏ...மானமிழந்த தமிழனே!

* உன் மேல்மட்டப் பணியாளர்கள் யாவர்க்கும் அடிநிலைத் தொண்டனுகத் தமிழில் பேசித் தொண்டு செய்கிறாயே, உன்னை ஆளுபவன் உன் மொழியையும் ஆளுகிறானே, தெரியவில்லையா?

* தொலைக்காட்சி, வானொலிகளில் மெல்ல மெல்ல இந்தியைப் புகுத்திவந்த அரசு, இக்கால் பாதிக்கும் அதிகமாகப் பரப்பிவரும் கொடுமையான வளர்ச்சியைக் கண்டு இளித்துத் திரிகிறாயே...தமிழா! இன்னும் பத்தாண்டுகளில் உன் மொழியைத் தொலைக்காட்சியில் கேட்டுவிட்டு வியப்படையப் போகும் காலம் வந்துவிடுமே-அப்பொழுதும் இப்படியே இருப்பாயா?

* அருவருப்புக் காட்சிகளை, இளைஞர்கள் உள்ளங்களில் நஞ்சூற்றுவது போன்று எடுத்து, இந்திப் படங்களைத் தமிழக மக்களிடையே, இக்கால் நிறைய ஓட்டிச் சுரண்டிப் பிழைக்கும் கொடுமைகளை எப்பொழுதுதான் உணரப் போகின்றாயோ!

- அடுத்த வேளை உணவில்லாத சுப்பனும், குப்பனும் இந்திப்படம் போய்ப் பார்க்கின்ற அளவில் அடிமைச் சகதியுள் ஊறித் திளைக்கின்றாயே!

இவ்வகையில் உன் கையாலாகாத் தனங்களைப் போட்டிப் போட்டுக்கொண்டு விளம்பரப்படுத்தும் இந்தித் திணிப்பின் மீது எரிச்சல் கொண்டு, 1965-இல் பிற இன அரசியல் வல்லுநர்கள் கூறிய கருத்துகளைப் பார்...!

0 இந்தி பேசாத மக்களின் மீது இந்தித் திணிப்புக் கூடாது. -வினோபா அடிகள்.

0 இந்தியை யார் மீதும், எவரும் சுமத்த முடியாது. குழந்தைகள் தாய்மொழியில் கல்வி பயில்வதே சிறப்பாகும். ஆட்சி அலுவல்கட்கு ஆங்கிலம் இன்றியமையாதது. -கிருபாளனி

0 பொது மொழியாகும் தகுதியை இந்தி ஒரு பொழுதும் பெறமுடியாது. இந்தி பெரும்பான்மையர் மொழி என்பது ஒப்ப முடியாத கருத்து. இந்தித் திணிப்பால் பேராயக் கட்சிக்கு வீழ்ச்சியே. - கோ. துரைசாமி.

0 பல நெருக்கடியான வேலைகள் நடுவணரசிற்கு இருக்க, இப்பொழுது இந்திமொழியைப் புகுத்துவதற்கு என்ன உடனடித் தேவை? இந்தி பொதுமொழியானால் தென்னாட்டினர்க்குப் பெருந்தீங்கு விளையும். இந்தியைத் திணிப்பதனால் என் உள்ளத்தில் கூடப் பிரிவினை உணர்ச்சி தோன்றிவிட்டது. இத் திட்டத்தால் நாடு 15 பகுதிகளாகச் சிதறுண்டு போகும். - இராசாசி.

0 அரசினர் அலுவலகங்களில் இந்தியைக் கொணர்தலை உடனடியாக நிறுத்தி வைத்தல் வேண்டும். நேருவின் வாக்குறுதியைப் புறக்கணித்துவிட்டுத் தான்தோன்றித் தனமாக, விளைவுகளை எண்ணாமல் நடந்துகொள்வது வருந்தத்தக்கது. ஆங்கிலத்தைப்போல், ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக வரையறுத்த நடையில் இந்தியைப் பயன்படுத்தல் முடியுமா என்பது மெய்ப்பிக்கப் படவில்லை. அப்படியே முடிந்தாலும் நாட்டுப் பொதுமொழியாகும் தகுதி இந்திக்கில்லை. மற்றும் அரசினர் பொதுத்தேர்வுகளில் இந்திக்கு ஒத்த வாய்ப்பு என்பது அடிப்படை உரிமைக்கு உலை வைப்பதாகும். இஃது ஒற்றுமை உணர்வைக் கெடுத்துப்பிரிவினை உணர்வு வலுவடைதற்குத் துணைபுரியும். இந்தி திணிக்கப்படவில்லை என்று முதலமைச்சர் கூறுவது உண்மையற்றது. இதனை எடுத்துக் கட்டித் திருத்தவேண்டிய அடிப்படைப் பொறுப்பு பேராயக் கட்சித் தலைமையினர்க்கும் மாநிலத் தலைமை அமைச்சர்கட்கும் உண்டு.

- தினமணி-19-1-1965.

- மேலே கூறப்பெற்றவற்றைப் பார்த்தாயா ?

- எப்படிப் பார்ப்பனியமே இந்தித்திணிப்பு சரியன்று என்று மக்களுடைய போக்கில் தம்மை நல்லபடி காட்டிக்கொள்ள எண்ணி வெளிப்படுத்துகிறது கண்டாயா?

- ஓ...அடிமைப் பிறவியே....! நீ என்று விழித்தெழுவாயோ....!

பட்டி, தொட்டிகளிலெல்லாம் இந்தி முழங்க வேண்டும் என்பதையும், இத்தி(ய) முதலாளிய ஆட்சியாளர்களின் போலிமையான மறைமுகமாகச் சுரண்டும்போக்கையும் நீ என்றுதான் உணர்வாயோ?

இறுதியாக உனக்கு ஒரு சொல்!

உன் உள்ள உணர்வுகளில் ஓடிக்கொண்டிருக்கும் கலவை அரத்தங்களை வடிகதெறிந்து விட்டுச் சிந்தித்துப்பார்! செயல்படு!

உன் மொழியை மீட்டெடுப்பது என்பது இந்தியின் வல்லாண்மையைத் தடுப்பது என்பதில் மட்டுமில்லை!

இந்தி இன்றைக்கில்லா விட்டாலும் என்றைக்கேனும் ஒருநாள் இந்நாட்டின் பிறமொழிகளை அழித்தொழித்து எருவாக்கி வளரத்தான் செய்யும்.

அப் போக்கில் நீ ஒவ்வொரு முறையும் வீறுகொண்டு எழப்போவதுமில்லை, உன்னை எவரும் எழுப்பப் போவதுமில்லை.

எனவே, அன்புத் தமிழனே...! அடிமைப் பிறவியே!

உன் மொழியைப் பாதுகாக்க, உன் உண்மைத் தமிழ்மொழி உலக மொழிகளுக்குத் தாய்மொழி எனப் பறைசாற்ற, போலிமைகளை வெட்டி வீழ்த்த, குமுகாயச் சமன்மையை ஏற்படுத்த, பொருளியல் ஏற்றத் தாழ்வை முறியடிக்க, நாகரிகப் பண்பாட்டைக்கட்டிக் காக்க, உனனின் அருந் தமிழ்நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் இன்றே தெளிவாகு; அதற்காகப் போராடு!

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவை உடைத்துக் கொண்டு, சிறுத்தையே வெளியில் வா!

- விடுதலை மறவன்.

---

**12-5-85 - இல் ஈரோட்டில்**

## உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்

# மாநிலச் செயற்குழுக்கூட்டம்

வரும் 12-5-'85 அன்று ஈரோட்டில் (இடம் பின்னர் தெரிவிக்கப்படும்) உ.த.மு.க.-வின் மாநில அளவிலான செயற்குழு கூட்டம் உள்ளது.

இம் மாநிலச் செயற்குழுக் கூட்டத்திற்கு இதுவரை அமைக்கப்பட்ட மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள் யாவரும் கண்டிப்பாக வருகை தருதல் வேண்டும்.

ஒவ்வோர் அமைப்பாளரும் தம்முடன் இருவரை அழைத்து வரலாம்.

கழக அமைப்புகளை விரிவுபடுத்தவும், கழகச் செயற்பாடுகளை வலிவுபடுத்தவும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ள இவ்வாய்வுக் குழுக் கூட்டத்திற்குத் தவறாமல் அனைவரும் வரவேண்டும்.

(பிற விளக்கங்களுக்கு இதழ் எண்: 54-ஐப் பார்க்கவும்.)

---

# இந்தி மொழிக்கு என்றும் இடங்கொடோம்!

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி, நாம் கூறும் ஒழுக்கம் என்பதற்கும், பண்பு என்பதற்கும் பெண்கள் சார்ந்த நடைமுறை என்பதையே முழுப்பொருளாக இல்லாவிடினும், முக்கால் அளவுப் பொருளாகவேனும் ஆக்கி வைத்திருக்கிறோம். நம் வீடுகளில், ஒருவன் எந்த அளவில் தவறாக நடந்து கொண்டாலும் அவனை நாம் பொறுத்துக் கொள்கிறோம். ஆனால், பெண்கள் நிலையில் தவறாக நடப்பவளையே நாம் பொறுத்துக் கொள்ள வியலாமல் கொதித்துப் போகிறோம். ஒரு வேளை அதைக்கூட பொறுத்துக் கொண்டாலும், 'ஆண் பிள்ளைக்கென்ன? ஆயிரம் பேரிடம் போவான்; வருவான்? ஆனால், இவள் செய்பலாமா, ஐயா?' என்று ஆண் செய்யும் அதே தவற்றைப் பெண் செய்கின்ற இடத்தில், அவளை விழுந்து பிடுங்குகிறோம். பெரும்பாலும் ஆண் செய்யும் அதே முறையில் ஒரு பெண் தவறு செய்தால், இந்த நாட்டில் அவளுக்கு வாழ்வே இல்லை என்று குமுகாயமும், நம் அற நூல்களும், நம் பண்பாடும் அடித்துப் பேசுகின்றன. ஆனாலும், இந் நாட்டில், நாற்றுக்குத் தொண்ணூற்றைந்து ஆண்களும், எழுபத்தைந்து, எண்பது பெண்களும் அந்தத் தவறுகளை மறைமுகமாக, அந்தக் காலம் முதல், இந்தக் காலம் வரை செய்துகொண்டு தான் இருக்கின்றனர் என்பதை வெளிப்படையாக நாம் பேச, எழுத, ஒப்புக்கொள்ளத் தயங்குகிறோம்.

இன்னமும் நமக்குக் கண்ணகி கதை தேவைப் படுகிறது. ஆனால், அதே கண்ணகியுடன் மாதவியும் இருந்தாள் என்பதை மறைக்க அல்லது மறக்க விரும்புகிறோம். ஆனால், இருவரின் சீரழிவுக்கும் ஒரு கோவலன் தானே காரணமாக இருந்தான் அல்லது இருக்கிறான் என்பதை நாம் ஏன் மேடைகளில் பேசுவதில்லை? ஆராய்ச்சிகளில் புலப்படுத்துவதில்லை? கண்ணகி ஒருத்தியைக் காட்டிக் காட்டியே, நம் நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களையுமே கண்ணகிகளாக்கிவிடத் துடிக்கின்றோம். ஆனால், நாம் மட்டும் கோவலன்களாகவே இருந்துவிடத் துடிக்கின்றோம். அப்படியானால், நம் நாட்டுக் கண்ணகிக்கு நாம் கொடுத்த மதிப்பு என்ன? அவள் காற்சிலம்பை விற்றுத்தானே கணவனைக் காக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. அரசனிடம் போய்ப் போராடித்தானே, தன் கணவன் கள்வனல்லன் என்று மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. அதற்கும்கூட மாந்தத் தன்மையின் வலிவு போதாமல், தெய்வத்தன்மையின் வியத்தகு (அற்புத) ஆற்றல் துணை வரவேண்டியிருந்தது! இங்கு ஒன்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்!

நம் நாட்டுக் கண்ணகிகளில் (அப்படி யாரேனும் இருந்தால்) எத்தனைப் பேர், கோவலன் போன்ற ஒருவனுக்குத் தன் கால் சிலம்புகளைக் கழற்றிக் கொடுப்பார்கள்? அவர்களிலும் எத்தனைப் பேர் அரசவைக்குப் போய் அரசனிடம் (இக் காலத்தில் அரசனில்லையாகையால்) போராடப் புறப்படுவார்கள்? அவர்களிலும் எத்தனைப் பேருக்குத் தெய்வம் துணை வரும்? இதற்கான விடைகளை யாரேனும் அறிவடிப் படையில் இங்குக் கூறமுடியுமா? சென்ற நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் புதுச்சேரி அரசில், தமக்கு விளைவிக்கப்பட்ட கொடுமைகளை பெண் அதிகாரி ஒருவர், கொடுமை செய்தவர் அமைச்சராகையால், அவரிடம் பல வகையிலும் போராடிப் போராடி, மேல் முறையீடுகளும் செய்து, கண்ணகிக்குக் கோயில் வைத்துக் கும்பிடும் இந்நாட்டில், எந்த வகைப்பயனும் பெறவில்லையே, ஏன்? அவ்வளவுதான் பெண்களுக்கும் ஒழுக்கத்திற்கும் அவர்களின் கண்ணகித் தன்மைக்கும் நாம் கொடுக்கும் மதிப்பு. அத்தகைய கண்ணகி ஒருத்தி இன்றைக்கு இருந்தால், அவள் விலைமகளாகவும், கலைமகளாகவும், புலை மகளாகவும் இருந்து தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும். இல்லையானால், அவளைச் சாகடித்துவிட்டு, அவள் சிலையைக் கோயிலில் வைத்துக் கும்பிட்டுக் கொண்டுதான் இருப்போம். ஆனால், வாழ விடமாட்டோம். இதுதான் நம் ஒழுக்கம் பண்பு என்பதன் வாழ்வியல் விளைவுகள்! நம வாழ்வியல் நடைமுறைகளுக்கும், நாம்படைத்துக்கொண்ட வாழ்வியல் கற்பிதங்களுக்கும் எத்துணை இடைவெளி! எத்துணை வேறுபாடு! அப்படியானால் அத்தகைய நல்லுணர்வுகளுக்குப் பொருள்தான் என்ன? எந்த முறையில், குமுகாய நிலையில் நாம் அவற்றுக்கு மதிப்பளிப்பது? (தொடரும்)




## பனப்பாக்கம் கிளைத் தொடக்க விழா!

கடந்த மீனம் 4, (17-3-1985) - ஆம் பக்கல், ஞாயிறு மாலை 6 மணியளவில், வடவார்க்காடு மாவட்டம் பனப்பாக்கத்தில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கிளையின் தொடக்க விழா, குமரன் திடலில் கொடியேற்றத்துடன் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தொடக்க விழா நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

உ.த.மு.க. மாவட்ட, வட்ட அமைப்பாளர்களும், பொறுப்பாளர்களும், ஆர்வலர்களும் குழுமியிருந்து, வானில் கொடி ஏற்றப்பெற்றவுடன், 'உ.த.மு.க. வாழ்க' என்று வாழ்த்தொலி எழுப்பி முழக்கமிட்டனர்,

நிகழ்ச்சித் தொடக்கத்திற்கு முன், செல்வன். தமிழ் இனியன், தமிழ் வாழ்த்துப் பாடினார். நிகழ்ச்சிக்கு, அரக்கோணம் வட்டச் செயலர் திரு. மு. கதிரவன தலைமை தாங்கினார். நல்லூர்ப்பேட்டை ஆசிரியர் திரு. எ. குமரவேல் வரவேற்புரை யாற்றினார்.

அதையடுத்து, திருவாளர்கள்: பச்சையப்பன், செம்பியன் ஆகியோர் உணர்வுரையாற்றுகையில், உ.த.மு.க. ஊர்தோறும் தொடங்க வேண்டிய தேவை குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

கழகத்தை வாழ்த்தியும், உ.த.மு.க. கொள்கைகளை விளக்கியும், பேசும் முகத்தான், வடவார்க்காடு மாவட்ட உ.த.மு.க. செயலர் புலவர். திரு. குமர. தலைஞாயிறன், க.மு; கல்.இ., 'தமிழ்மொழி அடிமை நிலை' என்பது பற்றியும், மாவட்ட அமைப்பாளர் திரு. மா. செ. தமிழ்மணி, 'தமிழ் நில அடிமை நிலை' என்பது பற்றியும், காவனூர் புலவர். திரு. க. மு. சுப்பிரமணியம், க.மு;கல்.இ., 'தமிழின அடிமை நிலை' என்பது பற்றியும், திரு. புஞ்சை. கோதண்டம், 'தமிழின விழிப்பு' என்பது பற்றியும் சிறப்புரை யாற்றினர். அவர்களை அடுத்து, இறுதியில், கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ், தமிழின தமிழ்நாட்டு அடிமை நிலைகளை விரிவாக விளக்கியும், கழகக் கொள்கைகளை எடுத்துரைத்துக் கழகத்தின் தேவைகளையும், தொண்டு நிலைகளையும் எடுத்துக் காட்டுகளுடன் கூறியும், ஏறத்தாழ 3 மணி நேரம், அரியதோர் எழுச்சியுரையாற்றினார்கள். இரவு நெடுநேரம் ஆகியும், இளைஞர்களும், முதியவர்களும் கலையாமல் இருந்து விழா வுரைகளை ஆர்வத்துடன் கேட்டனர்.

இறுதியில், நல்லூர்ப்பேட்டை திரு. இரா. சுடரோன், நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது. அதன்பின்னர், வெளியூர் அன்பர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும், பனப்பாக்கம் கிளையினர் இனிய விருந்தொன்று வைத்தனர்.

## வாங்கி விட்டீர்களா?


பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன.

| | |
|---|---|
| 1. பாவேந்தர் பாரதிதாசன் | 14—00 |
| 2. இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு? | 1—00 |
| 3. வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு) | 1—50 |
| 4. சாதித் திமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும் | 0—50 |
| 5. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 2—25 |

தொடர்பு கொள்ள:
மே/பா, தென்மொழி, சென்னை-5.


## காஞ்சி ஆச்சாரிக்குக் காய்ச்சல்

மார்ச்சு 10-ஆம் நாள், காவல் துறைக்குக் கூட தெரிவிக்காமல், கமுக்கமாகக் காஞ்சிபுரம் சென் றிருந்தார் தமிழக முதல்வர் ம. கோ. இரா. மூன்று சங்கராச்சாரிகளின் கால்களிலும் விழுந்து வணங்கி, வாழ்த்து (ஆசி) பெற்றார்.

''உங்கள் வாழ்த்தால்தான் நான் மீண்டும் உயிர்பெற்று வந்து, உங்களைச் சந்திக்கும் பேறு (பாக் கியம்) பெற்றேன்'' என்று பெரிய சங்கராச்சாரி யிடம் கூறினார் முதல்வர்; தொடர்ந்து,

'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்.' என்று கேட் டார். அதற்குப் பெரியவாள்(!),

'எனக்குக் கடந்த 20 நாள்களாகக் காய்ச்சல் அடிக்கிறது' என்றார்.

வாழ்த்தால் (ஆசீர்வாதத்தால்) காய்ச்சல் குண மாகாது எனத் தெரிந்த முதல்வர் கேட்டார். 'நான் மருத்துவரை அனுப்பி வைக்கட்டுமா?'

பெரியவாள்(!) அமைதியுடன் கூறினார்.

''வேண்டாம்; இங்கேயே ஒரு மருத்துவர் வந்து பார்த்துப் போகிறார்.'' -நன்றி: 'மன ஓசை', ஏப்-85

3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

முகமாக இருந்து கேட்டுவிட்டுப் பின்னர் மடல் வழி நமக்குத் தெரிவித்திருந்தார்.

அத் தமிழ்ப் பேராசிரியர், தி.மு.க.-வின் தலைமையருள் ஒருவரால் அனுப்பப்பட்டவரென்றும், பாவாணர் நம் தொடர்பினின்று அறவே விலகிவிட வேண்டுமென்பது அத் தலைமையருள் ஒருவரின் விருப்பம் என்றும்; அவ்வாறு செய்தால், பாவாணர்க்கு மாதம் மூவாயிரம் உருபா வருவாய் உள்ள, ஒரு பதவி தரப்படும் என்றும், அதுபற்றிப் பாவாணரின் முடிவு தெரிந்து போகவே தாம் வந்ததாகவும் அவர் கூறியதாக, நம் அன்பர் மடல் வழி எழுதியிருந்தார்; (அம் மடல் இன்னும் நம்மிடம் உள்ளது.)

இனி, இச்செய்தியைப் பாவாணரிடம் பின்னொரு கால் உறுதிப படுத்திக்கொண்டு, அவரிடம். "நீங்கள் தவறு செய்து விட்டீர்களே! என்னிடமிருந்து நீங்கள் விலகி விடுவதாகத் தெரிவித்து விட்டுப் பதவியைப் பெற்று, அதைத் தமிழுக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியது தானே, சிறந்த முடிவாக இருத்தல்முடியும். மேலும், நாம் விலகி விடவேண்டும் என்றால், உடலள வில்தானே அவ்வாறு செய்யமுடியும். உள்ளத்தளவில் நாம் கூடித்தானே இருப்போம். பின்னர் நீங்கள் ஏன் அவ்வாறு அவரிடம் கூறவில்லை" என்று கடிந்து கொண்டதற்கு, அப் பெருந்தகை, 'என்னைப் பொய் கூறச் சொல்கிறாயா?' என்று கண்களில் நீர் துளிர்க்கக் கேட்டார்.

22 : 23 : அடுத்து, நாம் சென்னையில் விடுதலை மாநாடு ஒன்றை முரசொலி அடியாருடன் நடந்த விருந்தபொழுது, கலைஞர் ஆட்சியால் தளை செய்யப்பட்டு, அன்பர்களுடன் 1975-இல் சென்னை நடுவண் சிறையில் இருந்த காலை அடிக்கடி சிறைக் கண்காணிப்பாளருக்கு, நாம் தி.மு.க.-வில் சேர்ந்துகொள்வதாக உறுதியளித்தால் விடுவிப்புக் கிடைக்குமென்று, ஆட்சித் தலைமையிடத்திலிருந்து விருப்பம் கேட்டுத் தொலைபேசிச் செய்திகள் வந்துகொண்டிருந்ததும், அக்காலிருந்த கண்காணிப்பாளர் பலமுறை அவற்றை எமக்குத் தெரிவித்துக் கருத்துக் கேட்டதும், நாம் மறுத்துப் பலர் அடியாருடன் வெளியேறியும், தொடர்ந்து சிறையிலேயே இருந்ததும், பின்னர் நாம் எஞ்சியிருந்த உறைத்த அன்பர்களுடன் திடுமென விடுவிக்கப் பெற்றிருந்தும் நமக்கு முன்னரே விடுவிக்கப்பெற்றிருந்த அடியாரும் அவருடன் சென்ற அன்பர்கள் சிலரும் கலைஞரைப் போய்ச் சந்தித்து வாழ்த்துப் பெற்றதும், ஆனால், நாம் அவ்வாறு செய்யாமலிருந்தது கண்டு, நாம் வெளிவந்த இரண்டு மூன்று நாள் கழித்து, இயக்குநர் நிலையிலிருந்த அரசு அதிகாரி ஒருவர் நம் வீட்டிற்கு வந்து (அவர் பெயரையும் இங்கு வெளியிட விரும்பவில்லை). "முன்னர் விடுதலை செய்யப்பெற்ற அன்பர்களனைவரும் கலைஞரைப் போய்ப் பார்த்திருக்க, நாம் மட்டும் போகாமல் இருப்பது நல்லதில்லை; எனவே கலைஞரிடம் போவோம் வாருங்கள்'' என்று அழைக்க, நாம் மறுத்ததும், பின்னர் அவர் கலைஞரே தங்களை அழைத்து வரச் சொன்னார் என்று கூறியும் நாம் ஒப்புக் கொள்ளாமற் போனதும் ஆகிய செய்திகள், நாம் எப்பொழுதுமே, எந்தக் கட்சியினரிடத்திலிருந்தும் சலுகைகளையோ, பதவிகளையோ விரும்பியதில்லை என்பதை உறுதிப் படுத்தும் சான்றுகளாகும். —(தொடரும்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.


கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக்
கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.